தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 8-12-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மஞ்சளை சேமித்து விற்கவும்

இந்தியாவில், 2014-15ல் மஞ்சள் 2.04 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு 11.90 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இது கடந்தாண்டை விட 18 சதவீதம் அதிகமாகும். தெலுங்கானா, ஆந்திரா, தமிழ்நாடு, ஒடிசா, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவை மஞ்சள் மொத்த உற்பத்தியில் 80 – 85 சதவீதம் பங்களிக்கிறது. இந்தியாவிலிருந்து, மஞ்சள் அமெரிக்கா, ஈரான், ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் ஐக்கிய அரசு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், 2014-15ல் மஞ்சள் 0.46 மில்லியன் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு 2.31 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. ஈரோடு, சேலம், தர்மபுரிமற்றும் நாமக்கல் ஆகியவை மஞ்சள் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

மஞ்சள் ஜுன் - ஜுலை மாதங்களில் சாகுபடி செய்யப்பட்டு ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. தற்போது மஞ்சள், தமிழகத்தில் அதிக அளவிலும், ஆந்திரா, தெலுங்கானா மற்றும் மகாராஷ்டிராவில் குறைந்த அளவிலும் பயரிடப்பட்டுள்ளது. தற்போது பயிரிடப்பட்ட மஞ்சள் 45 முதல் 50 இலட்சம் மூட்டை உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பாண்டிற்கான தேவை 63 – 64 இலட்சம் மூட்டைகளாக இருக்கும். வர்த்தக மூலங்களின் படி, இந்தாண்டில் இருப்பில் வைக்கப்பட்டுள்ள மஞ்சள் 15 இலட்சம் மூட்டை மட்டுமே, இது கடந்தாண்டை விட 50 சதவீதம் குறைவாகவே உள்ளது.

ஈரோடு சந்தையில் தற்போது நல்ல தரமான மஞ்சள் ரூ.9500 வரை விற்கப்படுகிறது. இந்தவிலை, கடந்த நவம்பர், விலையை விட 47 சதவீதம் அதிகமாகும். செப்டம்பர், 2015 முதல் மஞ்சள் விலையானது ஏறுமுகமாக உள்ளது. இதனால் தமிழகத்தில் சேமித்து வைக்கப்பட்ட மஞ்சள் சுமார் 20 சதவீதம் விற்பனைக்கு வந்துள்ளது.

வர்த்தக மூலங்களின் படி, ஆந்திரா மற்றும் மகாராஷ்டிராவில் மஞ்சள் உற்பத்தி வறட்சியால் பாதிப்படைந்து உள்ளது. எனினும் வடகிழக்கு பருவக்காற்றால் பெய்து வரும் தொடர் மழையால் மஞ்சள் விரலி பாதிப்பு அடைந்தாலும், மேற்கண்ட மஞ்சள் அதிகளவு பயிரிடப்படும் மாநிலங்களின் உற்பத்தி, குறைந்தளவு இருப்பு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி தேவை அதிகரிப்பால் வரக்கூடிய மாதங்களில் மஞ்சள் தேவை அதிகரிக்கும். மஞ்சள் விலையில், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நிலவும் சுழற்சி மற்றும் வேளாண் விலை பொருட்களில் முன்பேற வர்த்தகத்தில் உள்ள விலை அதிகரிக்கும் போக்கு ஆகியவை நடப்பு மற்றும் வரும் மாதங்களில் விலை உயர்வுக்கான காரணங்கள் ஆகும்.

இச்சூழலில் விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கிவரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வர்த்தகர்களிடம் ஆய்வு நடத்தியது.

தற்போது உள்ள சூழல் நல்ல தரமான மஞ்சள் டிசம்பர்- ஜனவரி, 2016ல் பண்ணை விலை குவிண்டாலுக்கு ரூ.9,500– ரூ.10,000 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. வரும், 2016-ம் ஆண்டில் மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின் அடிப்படையில் மஞ்சளை சேமித்து விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2431405

<u>தொழில்நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசைன மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள்,
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி-0422-6611284
தொலைநகல்: 0422-2430781
மின்னஞ்சல்: spices@tnau.ac.in

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்